# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
# TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL

# தமிழ்மொழி

## பொதுத்தேர்வு

## 2023

## வளர்தமிழ் 10

நேரம்: 180 மணித்துளிகள்

சுட்டெண்: | | | | | | | | |

மொத்தப்புள்ளிகள் : 100

## அலுவலகப் பயன்பாட்டுக்கு

| வினா எண் | புள்ளிகள் | 1ஆம் முறை | 2ஆம் முறை | இறுதிப் புள்ளிகள் |
|---|---|---|---|---|
| 1 | 30 | | | |
| 2 | 10 | | | |
| 3 | 10 | | | |
| 4 | 10 | | | |
| 5 | 15 | | | |
| 6 | 05 | | | |
| 7 | 05 | | | |
| 8 | 15 | | | |
| மொத்தப் புள்ளிகள் | 100 | | | |

| | |
|---|---|
| 1ஆம் முறை - பெயர் / ஒப்பம் | |
| 2ஆம் முறை - பெயர் / ஒப்பம் | |

## 1) தேர்விடை வினா - சரியான விடைக்குரிய கூட்டில் புள்ளடி இடுக.

1. குமரிக்கண்ட மாந்தனின் இடையறாத வாழ்வோடு இணைந்த ஒரு நிலப்பகுதி

அ) இந்தியா ☐  ஆ) இலங்கை ☐
இ) இத்தாலி ☐  ஈ) ஆபிரிக்கா ☐

2. இயற்கை இன்பம் என்ற பாடத்தில் இயற்கையைத் தாயாக உருவகித்துப் பாடியவர்

அ) கம்பர் ☐  ஆ) உருத்திரமூர்த்தி ☐
இ) இளங்கோவடிகள் ☐  ஈ) பாவலர்முடியரசன் ☐

3. வாழ்க! வளமுடன். இச்சொல்லியம்

அ) வியங்கோட்சொல்லியம் ☐  ஆ) கூற்றுச்சொல்லியம் ☐
இ) வினாச்சொல்லியம் ☐  ஈ) கலப்புச்சொல்லியம் ☐

4. புகழ்ந்தான் என்பதன் விகுதி

அ) ந் ☐  ஆ) புகழ் ☐
இ) த் ☐  ஈ) ஆன் ☐

5. எட்டுத்தொகை நூல்களில் ஒன்று

அ) பட்டினப்பாலை ☐  ஆ) மலைபடுகடாம் ☐
இ) திருக்குறள் ☐  ஈ) புறநானூறு ☐

6. இறுதியாக ஆழிப்பேரலை அழிவு ஏற்பட்ட ஆண்டு

அ) 2009 ☐  ஆ) 2005 ☐
இ) 2004 ☐  ஈ) 2007 ☐

7. திறப்பைக் குறிக்கும் தொகுதிப்பெயர்

அ) குவியல் ☐ ஆ) கோர்வை ☐

இ) வரிசை ☐ ஈ ) கூட்டம் ☐

8. சமைத்தல், ஆடுதல் என்பன

அ) குணப்பெயர் ☐ ஆ) சினைப்பெயர் ☐

இ) தொழிற்பெயர் ☐ ஈ ) காலப்பெயர் ☐

9. சொல்லின் இறுதியில் வராத மெய்யெழுத்து

அ) ட் ☐ ஆ) ய் ☐

இ) ண் ☐ ஈ ) ர் ☐

10. படித்தேன், விற்போர் என்பன

அ) தனிமொழி ☐ ஆ) தொடர்மொழி ☐

இ) பொதுமொழி ☐ ஈ ) இணைமொழி ☐

11. காரணப்பெயருக்கு ஓர் எடுத்துக்காட்டு

அ) மரம் ☐ ஆ) காற்று ☐

இ) தொலைக்காட்சி ☐ ஈ ) கட்டில் ☐

12. இறந்த வீரனின் உருவம்,பெயர்,செயல் போன்ற செய்திகள் பொறிக்கப்படும் கல்

அ) செங்கல் ☐ ஆ) சூளைக்கல் ☐

இ) நடுகல் ☐ ஈ ) படிக்கல் ☐

13. யானை செலுத்துபவன்

அ) வலவன் ☐ ஆ) ஓட்டுநர் ☐

இ) மீகாமன் ☐ ஈ ) பாகன் ☐

14. அச்சம், உவகை, இரக்கம் போன்ற உணர்ச்சிகளை வெளிப்படுத்தும் இடங்களில் இடப்படும் குறியீடு

அ) வினாக்குறி ☐ ஆ) வியப்புக்குறி ☐
இ) அரைப்புள்ளி ☐ ஈ) காற்புள்ளி ☐

15. பஃறுளி ஆற்றுக்கும் குமரி ஆற்றுக்கும் இடையே இருந்த நாடுகள்

அ) நாற்பத்தொன்பது ☐ ஆ) நாற்பது ☐
இ) முப்பத்தொன்பது ☐ ஈ) நாற்பத்தாறு ☐

16. பேரரையம் என்பது

அ) சிற்றூர் ☐ ஆ) பேரூர் ☐
இ) பேரரசு ☐ ஈ) சிற்றரசு ☐

17. மருதநிலத்தில் எழினிகளாகத் தோன்றுபவை

அ) தாமரைகள் ☐ ஆ) நீரலைகள் ☐
இ) குவளைகள் ☐ ஈ) முகில்கள் ☐

18. குறள்:
துறந்தார்க்கும் துவ்வா தவர்க்கும் இறந்தார்க்கும்
__________ என்பான் துணை

அ) துறவி ☐ ஆ) நண்பன் ☐
இ) இல்வாழ்வான் ☐ ஈ) வேந்தர் ☐

19. பின்வருவனவற்றுள் யகர உடன்படுமெய் தோன்றும் புணர்ச்சி

அ) தெரு + ஓரம் ☐ ஆ) கோ + அழகு ☐
இ) பூ + அழகி ☐ ஈ) மணி + அழகு ☐

20. தமிழரது இறைநெறி இன்றித் தமிழ் இல்லை என்று கருதியவர்

அ) தேவநேயப்பாவாணர் ☐ ஆ) மறைமலையடிகள் ☐

இ) தாமோதரம்பிள்ளை ☐ ஈ) கால்டுவெல் ☐

21. ஒருவரை முன்னேற்ற உதவுதல் என்ற கருத்தைக் குறிக்கும் மரபுத்தொடர்

அ) காதுகுத்துதல் ☐ ஆ) உலைவைத்தல் ☐

இ) கயிறுதிரித்தல் ☐ ஈ) கைதூக்கிவிடுதல் ☐

22. சேரன்செங்குட்டுவன் மலைவளம் காணச் சென்ற இடம்

அ) திருப்பரங்குன்றம் ☐ ஆ) திருச்செங்குன்றம் ☐

இ) திருக்கழுக்குன்றம் ☐ ஈ) திருச்செந்தூர் ☐

23. செயப்படுபொருள் குன்றியவினை

அ) தேடு ☐ ஆ) வெட்டு ☐

இ) நட ☐ ஈ) உண் ☐

24. குறிஞ்சி நில மக்களின் சிறப்புக்குரிய போர்க்கருவி

அ) வில் ☐ ஆ) வேல் ☐

இ) வாள் ☐ ஈ) கத்தி ☐

25. நாடகத்தில் நடித்தவன் பரிசு பெற்றான். இதில் வந்துள்ள வினையாலணையும் பெயர்

அ) பரிசு ☐ ஆ) பெற்றான் ☐

இ) நாடகம் ☐ ஈ) நடித்தவன் ☐

26. கட்டுரை எழுதும் பொழுது தவிர்க்கப்பட வேண்டியவற்றுள் ஒன்று

அ) கூறியதுகூறல் ☐ ஆ) விளங்கவைத்தல் ☐

இ) பந்திபிரித்தல் ☐ ஈ) சுருங்கச்சொல்லல் ☐

27. வேணி பாடியது. இதில் வந்துள்ள வழு

அ) பால்வழு ☐ ஆ) காலவழு ☐

இ) இடவழு ☐ ஈ) திணைவழு ☐

28. முதல், இடைக்கழகங்களில் இருந்து எமக்குக் கிடைத்த நூல்கள்

____________ கரணியமாக அழிந்தன.

அ) மண்சரிவு ☐ ஆ) நிலநடுக்கம் ☐

இ) கடற்கோள் ☐ ஈ) தீ ☐

29. சிறுமி மாவீரர்நாளில் சிறப்பாகப் பாடினாள். இச் சொல்லியத்தின் தோன்றா

உறுப்பு

அ) எழுவாய் ☐ ஆ) செயப்படுபொருள் ☐

இ) பயனிலை ☐ ஈ) அடைமொழி ☐

30. வன்னியில் இறுதிப்போர் நடைபெற்ற சிறுநிலப்பரப்பு

அ) கதிரமலை ☐ ஆ) பூநகரி ☐

இ) முள்ளிவாய்க்கால் ☐ ஈ) உடையாவூர் ☐

புள்ளிகள் 30

## 2) பந்தியை வாசித்து, வினாக்களுக்கு முழுவிடை தருக.

காலத்தை நன்கு மதித்து வாழ்வதே மக்கள் ஒவ்வொருவரினதும் கடமையாகும். மக்களின் வாழ்வுக்காலத்தை வரையறுத்துக் கூற இயலாது. மாந்தன் தன் உறக்கத்திலும் முதுமையிலும் வாழ்வின் பெரும்பகுதியை இழந்து விடுகிறான். எஞ்சிய பகுதிக்காலமே அவன் தன் அறிவை வளர்த்திடவும் ஆளுமையை விருத்தி செய்யவும் பணிபுரிந்திடவும் வாய்ப்புக்கிட்டுகிறது. எனவே மாந்தன் தனக்குக் கிடைக்கும் குறுகியகாலத்தைப் பொன்போற் போற்றி மதித்து வாழக் கற்றுக் கொள்ள வேண்டும். இளமைக் காலந்தான் கற்றலுக்கு ஏற்றகாலம். அக்காலத்தை நாம் தக்கவகையில் பயன்படுத்தத் தவறுவோமானால் பிற்காலத்தில் அதன் அருமையினை நினைத்து வருந்த நேரிடும். எனவே ஒருவன் இளமைப்பருவத்தில் தவறாமல் கல்வியைக் கற்றுத் தேற வேண்டும். இளமையிற் கற்கும் கல்வி உரிய காலத்தில் செய்யும் பயிரைப் போன்றது. இளமைப்பருவத்தில் கல்வியைப் பெற்றவர் தம் வாழ்வில் பெருமையடைவது திண்ணம். உரிய காலத்தையும் இடத்தையும் ஆராய்ந்து செயற்பட வேண்டும் என்று வள்ளுவரும் வலியுறுத்தியுள்ளார்.

1. எப்போது இளமைக் காலத்தின் அருமையினை நினைத்து வருந்த நேரிடும்?

---

---

2. மாந்தன் தன் வாழ்வின் பெரும்பகுதியை எவ்வாறு இழந்து விடுகிறான்?

---

---

3. வள்ளுவர் எதை வலியுறுத்தியுள்ளார்?

---

---

4. இளமையிற் கற்கும் கல்வி எதைப் போன்றது?

---

---

5. மாந்தன் தனக்குக் கிடைக்கும் குறுகியகாலத்தை எவ்வாறு வாழக் கற்றுக்கொள்ள வேண்டும்?

---

---

புள்ளிகள் 10

**3) பாடநூல் வினாக்கள் ஏழினுள் ஐந்திற்கு மட்டும் விடை தருக.**

1. தேவநேயப்பாவாணரது இயற்பெயர் என்ன?

2. நடுகல் எடுப்பதற்கான ஆறு நிலைகள் பற்றிக் குறிப்பிட்டவர் யார்?

3. வில்லுப்பாட்டில் இசைக்கப்படும் வில் எந்த மரத்தினால் செய்யப்படுகிறது?

4. "வடதிசை மன்னர் சிலர் எம்முன்னிலையிலேயே தமிழையும் தமிழரசரையும் பழித்துரைத்தனர்" இக்கூற்று யாரால் யாருக்குக் கூறப்பட்டது?

5. யாருடைய ஆட்சிக்காலத்தில் கண்டியும் அடங்காப்பற்றான வன்னியும் கைப்பற்றப்பட்டன?

6. கம்பருக்கு ஆடல் அரங்காகத் தோன்றிய நிலம் எது?

7. ஆய்வாளர்களினால் குமரிக்கண்டம் எவ்வாறு அழைக்கப்பட்டது?

புள்ளிகள் 10

**4. பின்வரும் கவிதைத் தலைப்புகளுள் ஒன்றினைத் தெரிவு செய்து எட்டு வரிகளுக்குக் குறையாமல் கவிதை எழுதுக.**

1. தமிழ்மொழி

2. நண்பன்

புள்ளிகள் 10

**5) அ) பந்தியை வாசித்து இலக்கண வினாக்களுக்கு விடை எழுதுக.**

மலையகப்பகுதியில் தேயிலைச்செடிகள் பச்சைப்பசேலென செழிப்பாக வளர்ந்திருக்கின்றன. மலைகள் எங்கும் பச்சைக் கம்பளம் விரித்தாற் போல பசுமையாகக் காட்சி தருகின்றன. அங்கே வளையல்கள் அணிந்த பெண்கள் கொழுந்துகளைப் பறிக்கின்றார்கள். வேலைகளை முடித்த மக்கள் தங்களது களைப்பையும் எண்ணாது கானகம் சென்று வெட்டிய விறகுகளைச் சுமந்து கொண்டு ஓட்டமும் நடையுமாக வீடு திரும்புகின்றனர்.

1. உவமைத்தொடருக்கு ஓர் எடுத்துக்காட்டுத் தருக.

___________________________________________

2. பலர்பாலுக்கு ஓர் எடுத்துக்காட்டுத் தருக.

___________________________________________

3. பொதுமொழிக்கு ஓர் எடுத்துக்காட்டுத் தருக.

___________________________________________

4. பெயரெச்ச வினைக்கு ஓர் எடுத்துக்காட்டுத் தருக.

___________________________________________

5. இணைமொழிச் சொல்லுக்கு எடுத்துக்காட்டுத் தருக.

___________________________________________

புள்ளிகள் 10

**ஆ) 1. தரப்பட்டுள்ள சொற்களை பொருத்தமாக நிரற்கூட்டில் எழுதுக.**

தொலைபேசி, முக்கோணம், பம்பரம், பறவை, மீன், காற்று

| இடுகுறிப்பெயர் | காரணப்பெயர் |
|---|---|
| | |
| | |
| | |

புள்ளிகள் 03

**2. நான்காம், ஏழாம் வேற்றுமை உருபு இடம்பெறுமாறு ஒவ்வொரு சொல்லியம் எழுதுக.**

4 ஆம் வேற்றுமை

____________________________________

7 ஆம் வேற்றுமை

____________________________________

புள்ளிகள் 02

**6) தரப்பட்டுள்ள சொற்குவியலில் இருந்து கருத்துக்குப் பொருத்தமான பழமொழிகளைக் கண்டறிந்து எழுதுக.**

சுடும் நாடாது

காலை விடாதே

தொட்டிலிற்

மட்டும்

தன்வினை

பூனை தன்னைச்

ஆழமறியாது சொத்து அடுப்பங்கரை

உண்ணாச் சூடுகண்ட

மண்ணாய்ப் சுடுகாடு

பழக்கம் போய்விடும்

1. வினைவிடாது.

______________________________

2. பழக்கத்தின் வலிமை.

______________________________

3. எதையும் ஆராய்ந்து செய்.

______________________________

4. பட்டறிவு பயன் தரும்.

______________________________

5. பயன்படுத்தாத செல்வம் வீணாகிப் போய்விடும்.

______________________________

புள்ளிகள் 05

## 7) பந்தியை உமது வாழிடமொழியில் மாற்றி எழுதுக.

பச்சைப் புல்வெளியொன்றில் நான்கு காளைகள் புல் மேய்ந்தன. அவை ஒற்றுமையாக வாழ்ந்தன. கொழுத்திருந்த அக்காளைகளைச் சிங்கமொன்று கண்டது. நேரம் பார்த்து, சிங்கம் ஒரு காளையினைத் தாக்கியது. அப்போது மற்றக் காளைகள் எதிர்த்துச் சிங்கத்தைத் தாக்கின. சிங்கம் அஞ்சி ஓடிவிட்டது. கடும் வெயிலால் நிலம் வறண்டு போனபோது காளைகள் உணவின்றி வாடின. காளைகளிடம் இருந்த ஒற்றுமையும் குலைந்தது. அந்த நேரம் பார்த்து, சிங்கம் ஒவ்வொரு காளையாகக் கொன்று தின்றது.

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

புள்ளிகள் 05

**8) தரப்பட்டுள்ள தலைப்புகளில் ஒன்றைத் தெரிவுசெய்து 200 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

* மொழிஞாயிறு தேவநேயப்பாவாணர்
* கடல்கொண்ட தமிழகம்
* நான் விரும்பும் தொழில்
* நான் கண்டு களித்த சுற்றுலா

புள்ளிகள் 15